# THE INFANT MAIL

WEB: WWW.IJMHSS.ORG EDITION 4 | SEPT,2018

OFFICIAL NEWSLETTER OF INFANT JESUS MATRIC. HR. SEC. SCHOOL AN ISO 9001:2015 CERTIFIED INSTITUTION


## FROM THE EDITOR

To begin with, I extend my heartfelt thanks to everyone for the overwhelming response and support extended for the initial editions of our school's newsletter. On behalf of the school management, I would like to convey the immense appreciation to all students and teachers for their enthusiastic participation and contribution. We've put in our best efforts to craft each article with great care. Your contribution and suggestions would be highly appreciated, and we look forward to making the subsequent editions better with your inevitable support.

-- Mr. Jesudhass, Education Coordinator

## FEATURED ARTICLE

### HOW A CHILD'S BRAIN DEVELOPS FROM THE BIRTH TO AGE THREE

A child's brain undergoes a rapid period of development during these three years , producing 700 new neural connections every second. When a baby is born, 100 billion neurons - or brain cells - have already been produced.

The future of a child's developing brain is in our hands. Parents, caregivers and family members all have a part to play in helping to form a baby's brain.

Scientists are rapidly untangling how a child goes from seeing images when just born to being able to feed, talk, play and communicate by the age of three.

"Different stimuli and tasks, such as hearing a lullaby or reaching for a toy, help establish different neural networks," wrote Yudhijit Bhattacharjee in an article for National Geographic.

Between the ages of one and five, the brain goes through cycles of growth and streamlining, with experience playing a key role in engraving the circuits that will endure."

Judit Gervain, a cognitive neuroscientist at Paris Descartes University, uses behavioural methods, optical brain imaging and electrophysiological measures to understand how babies learn their native



language.

She says: "For a long time we had this linear view. First, babies are learning sounds, then they are understanding words, then many words together.

"From recent results, we know that almost everything starts to develop from the get-go. Babies are starting to learn grammatical rules from the beginning."

Researchers have shown that children around two and a half years old are savvy enough to correct grammatical mistakes made by puppets. By the age of three most children seem to master a considerable number of grammatical rules.

Despite coming prewired with huge capabilities and potential, the brain depends heavily on environmental input to keep "growing" and developing.

Scientists are now discovering precisely how that development is moulded by the interplay between nature and nurture.

Dr Alison Gopnik, a professor of psychology and affiliate professor of philosophy at UC Berkeley and author of Philosophical Baby, said: "One of the biggest changes I think that's happened most recently is how amazingly much babies know from the time they're born.

"So, far from being a blank slate, even the youngest babies already seem to have some basic ideas about other people, about language, about the physical world about the objects around them.

"And one of the evolutionary ideas is that early period ... is where we're just free to learn and explore without actually having to put all that learning to work. "The picture is that having a caregiver who's actually willing to invest in taking care of you is one of the prerequisites for being able to do all this amazing learning that we know babies are capable of."

**JEYA DENNISON**
Principal

## SCIENCE

### PICKLING:

Pickling is the process of preserving or expanding the lifespan of food by either anaerobic fermentation in brine or immersion in vinegar. The resulting food is called a pickle. The pickling procedure will typically affect the food's texture and flavor. In east Asia, vinaigrette (Vegetable Oil and Vinegar) is also used as a pickling medium. Foods that are pickled include meats, fruits, eggs and vegetables. Another distinguishing characteristic is that Ph of pickles are 4.6 or less, which is sufficient to kill most bacteria. Pickling can preserve perishable food for months.

**GOKUL**
V STD

### WAYS TO AVOID POLLUTION

**WATER POLLUTION:**

- Not throwing garbage and chemicals in rivers
- Finding ways so that dirty water does not flow into rivers streams
- Cleaning rivers
- Recycling waste

**AIR POLLUTION**

- Reducing number of vehicles on the road
- Using environment-friendly fuels like Compressed Natural gas(CNG)
- Not bursting cracker during festivals or burning garbage

**NOISE POLLUTION**

- Not using loud car horns
- Reducing number of vehicles on the road
- Making stricter laws against those who play loudspeakers for a long time
- Not bursting crackers during festivals

**HASHIMULLA SHERIF**
V STD

### FUN FACT

"GANGA IS ONE OF THE MOST POLLUTED RIVERS IN THE WORLD"

# HAZARDS OF COMPOSTING MICROPLASTICS

## INTRODUCTION:

Composting waste is heralded as being good for the environment. But it turns out that compost collected from homes and grocery stores is a previously unknown sources of microplastic pollution, a new study has found in germany.

This plastic gets spread over fields, where it may be eated by worms and enter the food web, make its way into water ways or perhaps break down further and become airborne, says Christian laforsch, an ecologist.

Organic compost destined for farmers field has been found to contain a significant amounts of microplastic.

Environment scientists says that tiny fragments of plastic pollution contaminate much more of the planet than we are aware of, including the land where our food is grown.

## Body of science behind composting microplastics:

Scientists found that, the microplastic are mostly found in open places like:

-  Around most coastal areas
-  Integrated into the sand in remote beaches.
-  Frozen into sea ice, and in deep water sediments

In all these environments they have found tiny pieces of fragmented plastic, ranging in size from a few millimeters to too small to be seen by the naked eye.




To avoid the wastage of plastic and problem of overcoming the non-decomposition of microplastic process, we should minimize using of plastic in our day to day life.

A variety of microplastic collected from composted waste included polyethylene spheres, which are used in paints and coatings, used in widely in construction materials, electronics and vehicles, bits of polyethylene, which is found in bags, bottles, polyester fibers, polypropylene, use in bags, & packaging and textiles.

## Conclusion:

A research show a significant decrease in reproduction and potentially there is a change in population size of animals along with promotion of tumours in the liver of fish.

## To Avoid This:

We should encourage more

- Recycling
- Reuse and
- Reduction of plastic waste.

We should not just focus on the Oceans, but also freshwater and terrestrial ecosystems.The industrial firms should be asked to separate out plastics that are permitted in green bins, like plastic bags, diaper shells. If we can decrease the plastics in our daily life, we can induce some changes. Instead of using plastic, we can use jute bag or any other decomposable things. The real solution is changing behavior and preventing plastic from getting into the compost in the first place. We should strive for a behaviour change in every human being in order to create a world which is free of garbage.

**PRIYANKA**
Hindi Teacher

---



# SAVE WATER AND SAVE LIFE

**Introduction:**

Water is a life. It is a boon and it is very precious. Water is transparent. It's a pure thing. About 71% of land is covered by the water on earth, in which, 97% of water is covered by the ocean and only 3% of water is in use for drinking and domestic purposes.

**Importance of Water:**

It is important to save the water for us and for our future. Because we totally depend on water for our day to day activities. The various uses of water includes, balancing the ecosystem, in industries, power generation, vegetation, for fish, wildlife and recreation, house hold purposes.

**Proper use of Water:**

It is all individual's responsibility to save water and reduce the consumption of water in toilet & showering.

Rain water harvesting is one of the best options to save the water. About 4500 liters of water per month can be saved if we use washing machine, with proper load. 200 liters of water can be saved if we turn off all the taps properly after using water.

- In rainy reason promote tree plantation.
- Avoid watering plants in afternoon & sunny times as the water gets evaporated instead of being absorbed by the plant.
- Use water in cooler only when required and do not waste it.
- Promote water conservation programmes to spread awareness among the people.

**Conclusion:**

Be aware and think of the people who struggle a lot for even a drop of water. Saving water is important for us and for our future generation. Thus water is precious for us.

**"SAVE WATER, SAVE LIFE!!!!"**

**RAKSHIT**

UKG




NEHA SRI, UKG

# ENDANGERED ANIMALS

An endangered species is a species (a population) of Animals, plants or other organisms that is in danger of becoming extinct. This could happen because there are few of that animal left, its predators have grown in Number, or the climate that it lives in is changing, or the pleas if lives in have been destroyed. The world conservation union (IVCN) has worked out that endangered species are 40% of all organisms.

Many countries have laws, if obeyed can save species by stopping hunting, land development or making park and reserve poaching and other ivegal activities, however can still destroy them. Only a few plants and animals at risk of extinction, mostly vertebrate, are put on the lists and get legal protection. Many more species become extinct. Or will become extinct without people knowing about it.

**HASHIMULLA SHERIF**

V STD

# HOW RAIN IS FORMED:

The oceans are the chief source of rain, but lakes and rivers also contribute to it. The sun's heat evaporates the water. It remains in the atmosphere as an invisible vapor until it condenses, first into clouds and then into raindrops condensation happens when the air is cooled.

Air cools either through expansion or by coming into contact with a cool object such as a cold land mass or an in covered expanse. When air passes over.

# HOW A THUNDERSTORM BECOMES CYCLONE?

When water vapor transforms into rain, heat is released. This heat further warms the air which rises up creating lowering pressure in the region. This leads to chain of events creating low pressure region with high speed winds revolving around it. These are known as cyclones.

**AISHA**

VII STD

"NEARLY 97% OF THE WORLD'S WATER IS SALTY OR OTHERWISE UNDRINKABLE."




DHARSON, UKG

# மரம்

**மரத்தின் நன்மைகள்:**

மரம் நமக்கு பல வழிகளில் பயன்படுகிறது. உதாரணமாக வீட்டிற்கு வேண்டிய கதவு, ஜன்னல், வாயிற்படி, கட்டில், பீரோ, டேபிள், சேர் மற்றும் இதர மரச்சாமான்கள் செய்ய பயன்படுகிறது.

மரம் அதிகமாக வளர்ப்பதால் நமக்கு மழை கிடைக்கும் மற்றும் மரத்தின் இலைகள் விவசாய பயிர்கள் செய்வதற்கு தழை சத்தாகப் பயன்படுகிறது.

நாம் இளைப்பாறுவதற்கு மரத்தின் நிழல் குளிர்ச்சியான நிழல் தருகிறது. மரங்கள் பறவைகளுக்கு சரணாலயமாக விளங்குகிறது.

மரங்கள் பொதுவாக, சுவாசிக்கும் எல்லா உயிரினங்களுக்கும் தேவையான (ஆக்ஸிஜனை) கொடுக்கிறது மற்றும் அவைகள் வெளியேற்றுகின்ற (கார்பன்-டை-ஆக்ஸைடை) மரங்கள் உட்கொள்கின்றன.

மரங்கள் அதிகமாக வளர்ப்பதால் பூமியை நிலம் அதிர்விலிருந்து காக்கலாம் மற்றும் மண் அரிப்பை தவிர்க்கலாம்.

**KIRUTHEESH**

UKG




KEERTAN S, UKG

# THE GRAPH OF THE SIN & COS FUNCTION:

Y=sin x

Here x represents a variable angle. Take the horizontal axis to be the x axis and vertical axis to be the y axis.

Y=sin x is show in the figure.




First note that it is periodic of period 2π. Geometrically it means that if you take the curve and slide it 2π either left or right, then the curve falls back on itself. Second, note that the graph is within one unit of the Y axis. The graph increases and decreases periodically. For instance increases from –π/2 to π/2 and decreases from π/2 to 3π/2.

Y= cos x

Observe that the graph of Y=cosx looks just like the graph of Y=sinx except it is being translated to the left by π/2. This is because of the identity cosx=sin(π/2+x). It easily follows from the graph that cosx=cos(-x)= sin(π2/+x).




**LOGANATHAN M**

Maths Teacher



# பெற்றோர்களின் சிந்தனைக்கு

மாணவன் தவறு செய்தால் அடிக்கக்கூடாது, திட்டக்கூடாது, மனம் புண்படும் படி பேசவும் கூடாது எனில்.........

படிக்குமாறு அறிவுறுத்தக்கூடாது, ஒழுக்கத்தை வலியுறுத்தக்கூடாது, உணவு உண்ண உறங்கச் சொல்லக்கூடாது, இது எதுவுமே சில மாணவர்களுக்குப் பிடிக்காது. அவர்களின் மனம் புண்படும் எனில் ஆசிரியரின் வேலை தான் என்ன?

பண்படுத்துவது என்பது, புண்படுத்துதல் அல்ல

கற்களைச் சேதப்படுத்தக்கூடாது என்று சொன்னால் சிற்பங்களை எப்படி உருவாக்க முடியும். நிலங்களைச் சேதப்படுத்தக்கூடாது என்றால் இவ்வுலகில் விளைச்சல் எப்படிக்கிடைக்கும்?

தங்கத்தை நெருப்பில் இடாதே என்று சொன்னால், தங்க ஆபரணங்கள் செய்வது எப்படி?

இருப்புத் தாதுவை நெருப்பில் போடாமல் தீயில் சூடு ஏற்றாமல் எப்படி (உபகரணங்கள்) செய்யமுடியும்?

புரிதல் வேண்டும்...

பண்படுத்துவது என்பது புண்படுத்துவது அல்ல, இந்த புரிதல் மாணவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் வேண்டும்!

ஒரு பச்சிளம் குழந்தைக்கு, பிறந்த 15-வது தினங்களுக்குள் ஊசி போடுகிறார் மருத்துவர்

குழந்தைக்கு வலிக்கும் இது தவறு என்று அவரிடம் சொன்னால் குழந்தை நலமுடன் வாழ்வது எப்படி?

ஒரு வீட்டில் குழந்தையின் கைகளைத் தந்தைப் பிடிக்க கால்களை மாமா பிடிக்க, தலையை அசைக்காமல் பாட்டி அழுத்திப் பிடிக்க குழந்தைக்குப் பிடிக்காத கசப்பு மருந்தை தாய் பாசத்தோடு தருகிறாள் எதற்காக?

குழந்தை மீது செலுத்தப்படும் எவ்வளவு மோசமான வன்முறை இது அவர்களுக்கான தண்டனை என்ன?

குழந்தையின் நலன்கள் இரண்டு:

ஓன்று உடல் நலன், இரண்டு உள்ள நலன்.

உடல் நலனுக்காக இயங்கும் மருத்துவத்துறையின் கைகளைக் கட்டினால் “ஊசி குழந்தைக்கு வலிக்கும், மருந்து குழந்தைக்கு கசக்கும், அறுவை சிகிச்சை அதைவிட வலிக்கும் எனவே, எல்லாவற்றையும் தவிர்த்து குழந்தைக்கு மனம் நோகாமல் அறிவுரை மட்டும் கூறி அனுப்புங்கள்”என்று சொல்வீர்களா?

மருத்துவத்துறையின் கைகள் கட்டப்பட்டால், உடல் நலன் ஒழிந்தது என்று அர்த்தம் புரிதல் வேண்டும்.

அதைப்போல உள்ளத்து நலனுக்கானது தான் கல்விக் கூடங்கள், அது கூடாது, இது கூடாது என்று இங்கே கற்பிப்பவரின் கையும், சுய சிந்தனையும், உணர்வும் கட்டப்பட்டுவிட்டன.

விளைவு நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஒரு கல்விக்கூடம் மூடப்பட்டால் அது 100 சிறைசாலைகள் திறப்பதற்குச் சமம். மூடும் அளவிற்கு அதிக சிரமம் வேண்டாம்.

ஆசிரியரின் உடலும் உள்ளமும் கைகளும் கட்டப்பட்டாலே போதும், உள்ள நலன் முற்றிலுமாக அழிந்து விடும்.

மாணவன் ஆசிரியரால் திருத்தப்படாவிட்டால் ஆசிரியரின் சிறுகோளால் தூண்டப்படாவிட்டால், ஆசிரியரின் சிற்றுளிபோன்ற நாவினால் செதுக்கப்படாவிட்டால், ஆசிரியர்களின் பல மொழிகளால் பண்படுத்தப்படாவிட்டால், காவலர்களின் கையில் இருக்கும் குறுந்தடிக்கு இரையாக வேண்டும் அல்லது சிறை சாலைக்கும் சென்று கம்பிகளைத்தான் எண்ண வேண்டும்.

சிந்தியுங்கள் பெற்றோர்களே! பெரியோர்களே! அரசியல் தலைவர்களே!!!!!

**V.P. DENNISON**

Correspondent

மரணமே வந்தாலும்
உன்னை மறக்காத இதயம் வேண்டும்
மீண்டும் ஒரு ஜென்மம் என்றால்
அதில் நீயே
என் நண்பனாக வேண்டும்
வாழ்க்கை என்பது
நீ வாழும் வரை அல்ல
வாழ்வில் நீ சாதிக்கும் வரை
காற்றுக்கு வேலி இல்லை
நட்புக்கு எல்லையில்லை.

**VINOTHINI, PRIYA, SALOMI**

X STD




MONISHA S, VIII

# மாற்றம் வேண்டும்

இன்றைய ஆசிரியாளர்களிடமும் மக்களிடமும் மாற்றம் வேண்டும்

மக்களே மக்களுக்காக மக்களால் ஆளத் தோன்றிய ஆட்சி மக்கள் நலனுக்காக அமைய வேண்டுமேயன்றி, மக்கள் விரோத ஆட்சியாக அமையக் கூடாதென்பதே இச்சிறு கட்டுரையின் நோக்கம்.

" நெல்லும் உயிரன்றே நீரும்உயி ரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் யானுயிர் என்பது அறிக்கை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே" (புறம்-186)

-மோசி கீரனார்

இவ்வுலகில் வாழும் மக்களுக்கு நெல்லும் நீரும் உயிராகாது. முறையான ஆட்சி செய்து மக்களைக் காக்கக் கூடிய மன்னனே உயிர் போன்றவன் என்கிறது, இப்புறநானூற்றுப் பாடல்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்"

குறள்-388

மக்கள் நலிவுறாமல் முறைசெய்து ஆட்சி நடத்தும் மன்னவனை, வள்ளுவர் இறைவனுக்கு ஈடாக வைத்திருக்கிறார் என மேலேக் கூறிய சான்றுகளின் மூலமாக, சங்க காலத்தில் சிறப்பான முறையில் ஆட்சி செய்த மன்னர்கள் வாழ்ந்த திருநாடாக இருந்த பார் போற்றும் தமிழர் வாழ்ந்த தமிழ் நாடு காலப் போக்கில் ஆட்சியாளர்களால் படிப்படியாக வீழ்ச்சி அடைந்துள்ளது! என்பதனை யாவராலும் மறுக்க முடியாது.

'மது நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு'
'புகைப் புற்றுநோயை உண்டாக்கும்'

என மக்கள் வரிப்பணத்தில் ஊடகங்களில் விளம்பரம் செய்யும் மத்திய மாநில அரசுகள் தாயாரிக்கும் அந்நிறுவனங்களை மூட முயற்சிக்காதிருப்பது விந்தையாயிருக்கிறது.

அந்நிறுவனங்களுக்கு அனுமதி அளித்து அங்கிகாரம் கொடுத்துவிட்டு, விழிப்புணர்வு விளம்பரம்!

இப்படி முறை செய்து ஆட்சி செய்யும் முறையை யாரிடமிருந்து இவர்கள் கற்றார்களோ! எனக்கு விளங்கவில்லை.

அரசே டாஸ்மாக் கடைகளைத் திறந்து மது பாட்டில்களை விற்று நாட்டிற்கும் வீட்டிற்கும் நன்மை விளைவிக்கிறதா? இதுவும் எனக்கு விளங்கவில்லை.

மதுபானமும் புகையிலையும் பான் மசாலாவும் இதுப் போன்ற இன்னும் பல மக்கள் நலவிரோத பொருட்களை விற்பனைச் செய்வதன் மூலம் நாட்டு வருமானத்தை பெருக்குவதைத் தவிர மற்ற வகையில் அரசால் வருமானம் ஈட்ட முடியாத பொழுது, அரசிடமிருந்து அனுமதி பெற்று இயங்கும் அத்தனை தனியார் நிறுவனங்களும் இலாபம் ஈட்டுவது எப்படி? என நெஞ்சோடு கேள்வி எழுப்பிக் கொள்ளும் பல கோடி மக்களில் நானும் ஒருவன்.

மக்கள் வரிப்பணம் எதற்கெல்லாம் பயன்படனும்? குடிநீர், சுகாதாரம், சாலை, மின்சாரம், போக்குவரத்து, கல்வி, விவசாயம் என இவைகளுக்கெல்லாம் இலவசமாக பயன்படனும். பயன்படுகிறதா? இதுவும் கேள்விக் குறியே! மாறாக ஆட்சியில் இருப்பவர்களுக்கு கொடி, பேனர் மற்றும் அவர்களை ஆட்சியில் அமர வைக்கும் வாக்கு வங்கிகளுக்கே பயன்படுவதாக தோன்றுகிறது.

மேலும், காவல் துறைக்கும் நீதி மன்றத்திற்கும், தேர்தல் ஆணையத்திற்கும் செய்கின்ற அத்தனை செலவுகளும் வீண் என தோன்றுகிறது. இத்துறைகளில் நியாயமான முறையில் வேலை செய்பவர்களைத் தவிர மற்ற ஊழியர்கள் ஊதியமாக பெறும் வரிப்பணம்?

எனவே, ஆட்சியாளர்களும் காவல் துறையும் நீதி மன்றமும் தேர்தல் ஆணையமும் எப்பொழுது தன் கடமையை சரிவரச் செய்கிறார்களோ அப்பொழுது தான் நம் பழம்பெரும் தமிழகத்தின் ஆட்சியைக் கொண்டுவர முடியுமென நான் நம்புகிறேன். எனவே, நல்ல ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுப்போம்!!!!

**த. சங்கரலிங்கம்**
**முதுகலை தமிழாசிரியர்**

# அதுதான் புதிய உலகமோ?

மரங்களைத் தேடித்தேடி அலைகிறது
தாகம் தீர்க்கும் தண்ணீரைத் தேடுகிறது
கூடுகள் கட்ட வீடுகளைத் தேடுகிறது
கூடி உண்ண பசும் வயலைத் தேடுகிறது.

இளைப்பாற நிழல் இல்லை
இரை தேட வயலில்லை
இசைபாட இனிமை இல்லை
இன்னொரு உலகம் வேறில்லை



வீடுகளில் கட்டும் கூடுகளும்
மனிதக் கரங்களால் கலைகிறது...
மனிதம் குறைந்த உலகத்தில்
மரங்கள் மட்டும் வாழுமா?

ஆதி மனிதன் மீண்டும் வருவானோ
முதல் விதையைத் விதைப்பானோ
மீண்டும் ஓர் உலகம் உருவாக்குவானோ
அதுதான் புதிய உலகமோ?

**KEERTHIKA. R**
X STD

**மக்களாட்சி?**

விடுதலை பெற்றும்
சுதந்திரம் பெற்றும்
இத்தனை ஆண்டுகளாகி
என்ன ஆண்டு
கிழித்தார்கள்.....
இருக்க இடமும்
உடுக்க உடையும்
உண்ண உணவும்
எல்லோர்க்கும்
கிடைத்ததா? ஏன
யாரோவொருவர்
என்னெதிரில்
அவர் எண்ணத்திலிருந்து
சொன்னதை
எண்ணத்தான்
தோன்றுது
இல்லை என்று!

**த. சங்கரலிங்கம்**
**முதுகலை தமிழாசிரியர்**



SHIVANI A, UKG




PRASANNA LAKSHMI, VIII

# எப்பொழுது பாரதத் திருநாடு வல்லரசாகும்?

» ஒரு வேளை சோற்றுக்கு அல்லற்படும் ஏழையின் கனவு பலிக்கும் நாள் தான், நம் பாரதத்திருநாடு வல்லரசு அடையும் நாள் ஆகும்.

» என்று விவசாயிகள் மனங்குளிர்வதைக் கொண்டு இந்நாட்டின் தரம் அறியப்படுமோ, அன்று தான் நம் பாரதத்திருநாடு வல்லரசாகும்.

» பெண்களுக்கு எப்போது முழுமையான பாதுகாப்பு கிடைக்குமோ, அன்று தான் நம் நாடு வல்லரசடையும்.

» குற்றமும் ஊழலும் நிறைந்ததல்ல தீர்ப்பும்தீர்மானமும். கூர்மையான பேனா முள்ளினால் எழுதப்படும் ஒவ்வொரு தீர்ப்பும், எப்பொழுது நியாயத்துடனும் நித்தியத்துடனும் கூடிய நீதியாக மாறுமோ அன்று தான் நம் நாடு வல்லரசாகும்.

» எப்பொழுது இந்நாட்டில் உள்ள அனைவரும் இலவசமாகவோ அல்லது குறைந்த விலையிலோ மருத்துவ வசதியும் மருந்துப்பொருட்களும் பெறுகிறார்களோ அந்நாள் தான் நம் தாய்த் திருநாட்டின் பொன்னாளாகும்.

» இருப்பினும் மனிதா, இயற்கை மருத்துவம் தான் நம் முதல் பண்பாட்டு மருத்துவம் என்பதை மறந்துவிடாதே!

» வேற்றுமைகள் பல இருப்பினும் அவற்றுள் ஒற்றுமை இருந்தால் தான் இந்திய நாடு வல்லரசடையும்.

» இவை அனைத்தையும் விட முக்கியமான ஒன்று, ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தேசபக்தியும், நாட்டுப்பற்றும் இருக்கவேண்டும்.

» ஒவ்வொரு தனிமனிதனும் தன் வாழ்க்கை முறையினை சீரானதாகவும், சரியாகவும் மாற்றிக் கொண்டால் தான் இந்தியா வல்லரசடையும். "தன்னிடமே குறையிருக்க மற்றவர்களின் குறைகளை ஏன் ஆராய வேண்டும்". ஆகவே, மனிதா முதலில் நீ மாறு; பின்பு உன் நாட்டை வல்லரசு நாடாக மாற்று!

» 2020 வதிலோ அல்லது 2050 திலோ இந்தியா வல்லரசு அடையும் என்று பகல்கனவிலே கூறும் கூற்று தவறாகும். மனிதா நீ மாறாமல் இங்கு எதுவும் மாறாது.மாற்றம் வேண்டும் மனிதா! முன்னேற்றம் பெற.

**கா. ரிஜ்வானா**
XII STD

# நிறம்

ஏன் ஒரு இனமே அதன் பெரும்பான்மையான மக்களுடைய சரும நிறத்தைக் குறையாக கருதுகிறது? இந்த கேள்வி தான் இந்தக் கட்டுரை உருவாக மையக்காரணம் என்று வைத்துக்கொள்ளலாம். நம் சமூகத்தில் இன்று எங்கு பார்ப்பினும் வெள்ளை மோகம். பிறக்கும் பச்சிளம் குழந்தையாக இருக்கட்டும், மணக்கும் மனமக்களாக இருக்கட்டும் சமூகத்தின் பார்வையில் வெள்ளையே எங்கும் சிறப்பு. இயற்கை நமக்கு கொடுத்த நிறத்தையே வெறுக்கத் தூண்டும் இந்த வெள்ளை மோகம் எங்கிருந்து வந்தது, எவ்வாறு நம் அன்றாட வாழ்வில் ஒரு வலிமையான நிலை கொண்டுள்ளது, அதனால் வரும் சமூகவியல்(sociological) சார்ந்த விளைவுகள் என்ன. இந்தக் கட்டுரை இக்கேள்விகளுக்கு பதில் காண ஒரு தேடல்.

வெள்ளை மோகம் இன்று நம் சமூகத்தில் ஒரு சர்வ சாதாரணமான பகுதி ஆகிவிட்டது. இம்மோகத்தின் ஆரம்பம் ஒரு தரப்பினரால் சாதி அமைப்புகளில் வேரூன்றி உள்ளது என்று கூறப்பட்டாலும், பல சமூகவியல் மற்றும் வரலாற்று நிபுணர்கள் colonialism எனப்படும் மேற்கத்திய காலனியத்துவத்தையே முக்கிய காரணமாக கூறுகின்றனர். ஒரு வகையில் இன்று நம்மிடம் தழும்பும் வெள்ளை மோகம் 200 வருட காலனியத்துவத்தின் உதிரிகள் என்றும் கூறலாம். அன்று காலனியத்துவத்தை நியாயப்படுத்துவதற்கு ஐரோப்பிய அறிஞர்கள் எடுத்துக்கொண்ட கூற்று aryan invasion theory எனப்படும் 'வெள்ளை ஆரியர்கள் கருப்பு திராவிடர்களைப் படையெடுத்து ஆண்டனர்', எனவே நவ ஆரியர்களாகிய நாங்கள் செய்வதும் சரியே என்பதே. நிறத்தையே மையமாக வைத்து தாங்கள் மேன்மையானவர்கள் என நியாயப்படுத்திக்கொண்டனர். கறுப்பானவர்களை 'தூய்மை' ஆக்குவது 'வெள்ளை மனிதனின் பாரம்'(white man's burden) என்று கூறிக்கொண்டு பிற நாகரீகங்களை படையெடுக்க அவர்களே அவர்களுக்கு உரிமை கொடுத்துக்கொண்டனர்.
ஒடுக்கப்பட்ட மக்கள் அவர்களது அடக்குமுறையாளர்களின் அழகியல் தரநிலைகளையே (aesthetic standards) மேன்மையாக கருதி பின்பற்றுவர் என்பது ஒரு சமூகவியல் கூற்று. இந்தக் கூற்று இன்று நம் சமூகத்தில் பிரதிபலிப்பதை நிச்சயம் எவராலும் எளிதில் தட்டிக்கழிக்க முடியாது. ஆனால் இந்தக் கூற்று உண்மை அல்ல என்று கூறி இதற்கு பொதுவாக பலரும் எதிராக எழுப்பும் கருத்து "எனது ரசனைகளை நான்தானே நிர்ணயம் செய்கிறேன். இதை எவ்வாறு காலனியத்துவத்தின் அல்லது சமூகத்தின் தாக்கம் என கூற முடியும்" என்பதுதான். இதற்கு பதிலை நாம் சமூகத்தினிடம் இருந்தே பெற முடியும்.

ஒரு கலாசாரம் அது சார்ந்த சமூகத்தின் வெளிப்பாடு என வைத்துக்கொள்ளலாம். நம்முடைய எண்ணங்கள், செயல்கள், மற்றும் ரசனைகள் பல ஒரு குறிப்பிட்ட அளவிற்கு நாம் சார்ந்த கலாசாரத்தினாலேயே நமது சுயசிந்தனையையும் தாண்டி நிர்ணயிக்கப்படுகிறது. இதை கலாச்சார சீரமைப்பு(cultural conditioning) என்று கூறலாம். ஒரு சமூகத்தின் அழகு தரநிலைகளும் அதன் கலாச்சார தயாரிப்புகளால் பெரிதும் நிர்ணயிக்கப்படுகிறது. ஊடகம் என்பது சமூகத்தின் ஒரு முக்கிய கலாச்சார தயாரிப்பு. இந்த அழகு தரநிலை(beauty standards) சமாச்சாரத்தில் ஊடகங்கள் மேற்கத்திய நாகரீகத்தின் அழகு தரநிலைகளைத் தவறான முறையில் பல மடங்குகளில் சமூகத்தின் மேல் திணித்துக்கொண்டு இருக்கிறது. இன்று தொலைக்காட்சியில் குறிப்பாக திரைப்படங்கள், நாடகங்கள் மற்றும் விளம்பரங்களில் நமது சமூகத்தில் பொதுவாய் விளங்கும் கருப்பு சரும நிறம் கொண்ட மனிதர்களைப் பார்ப்பதே அரிதாகிவிட்டது. இதை உறுதி செய்ய 06-10-18 அன்று தமிழகத்தில் பிரபலமான சன் தொலைக்காட்சியில் காலை 9.05 முதல் 9.10 வரை ஒளிபரப்பப்பற்ற விளம்பரங்களை ஆராய்ந்தபோது ஒரு விளம்பரத்தில் கூட கருப்பு நிறம் கொண்ட ஒரு கதாப்பாத்திரத்தைக் காண முடியவில்லை. ஆண்களை பொறுத்தவரை மொத்தம் 16 கதாபாத்திரங்களில் 12 பேர் 'வெள்ளையாகவும்' 4 பேர் மாநிறம் கொண்டும் இருந்தனர். பெண்களைப் பொறுத்தவரையில் 16 கதாபாத்திரங்களில் 14 பேர் 'வெள்ளையாகவும்' 2 பேர் மாநிறம் கொண்டும் இருந்தனர். மொத்தத்தில் நம் தமிழ் மொழி சார்ந்த தொலைக்காட்சி சேனல்களைக் கண்டு நம் கலாசாரத்தை அறிய விரும்பும் வெளிநாட்டவருக்கு இறுதியில் மிஞ்சப்போவது வெறும் ஏமாற்றமே. ஏனென்றால் தொலைக்காட்சி சேனல்களைப் பொறுத்தமட்டில் தமிழ் நாட்டில் வாழ்வது வெள்ளை நிறம் உடையவர்களே. இது தொலைக்காட்சிக்கு மட்டும் உட்பட்டது அல்ல. செய்தித்தாள், இணையதளம் என அனைத்து ஊடக தளங்களுக்கும் பொருந்தும். இந்த வெள்ளை மோகத்தைத் தங்கள் சுயநலத்திற்காக ஊடகங்கள் மூலமாக அதிகம் பயன்படுத்துவது Fair & Lovely போன்ற அழகு பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தான். சரி, இந்த வெள்ளை மோகம் இருந்தால் என்ன? அது எனக்கு அழகாக தெரிகிறது மற்றும் Fair & Lovely போன்ற 'அழகு' பொருட்கள் என்னை மேலும் 'அழகாக்க' உதவுகிறது. அதனால் என்ன பெரிய பிரச்சனை என்று சிலர் கேள்வி எழுப்பலாம். அதற்கு பதில் காண இதோ ஒரு முயற்சி.

வெள்ளை மோகத்தால் இன்று நம் சமூகத்தில் இரண்டு மாதிரியான பிரச்சனைகள்- ஒன்று உடல்ரீதியானது மற்றொன்று மனோரீதியானது. உடல்ரீதியாக சில fairness creamகளில் பயன்படுத்தப்படும் corticosteroids போன்ற வேதிப்பொருட்களால் சருமத்திற்கு நிகழும் கொடிய பாதிப்புகளையும் பல ஆய்வுகள் நிரூபித்துள்ளன. உடல்ரீதியாக இத்தகைய பாதிப்புகள் நிகழ்ந்தாலும் மனரீதியாக வெள்ளை மோகம் ஏற்படுத்தும் பாதிப்பு இன்னும் கொடியனவாக திகழ்கிறது.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் fairness cream விளம்பரங்கள் ஏற்படுத்தும் விளைவுகள் பெரும் கொடுமை. அனைத்து fairness cream விளம்பரங்களும் பின் தொடர்வது ஒரே formulaவை தான்: fairness cream உபயோகிக்கும் முன், fairness cream உபயோகித்தப் பின். Fairness cream விளம்பரங்களைப் பொறுத்தவரையில் ஒருவர் கருப்பாக இருக்கும் போது அவர்களுக்கு நிகழ்வது அனைத்தும் தோல்வியை. கருப்பாக இருந்தால் யாருக்கும் வேலை கிடைக்காது. கருப்பு ஒரு சாபம் என்ற அளவுக்கு மிகைப்படுத்தி ஒரு தவறான சிந்தனையைப் பார்ப்பவர்கள் ஒவ்வொருவரின் மனதிலும் விதைத்து வருகின்றனர். ஒரு மனிதனின் தனித்திறமையை உதாசீனப்படுத்தி ஒருவரை வெறும் அவரது சரும நிறத்திற்கு சுருக்கிவருகிறோம். இவை அனைத்தும் நமது மனதளவில் இருக்கும் வெள்ளை மோகத்தால்.

வெள்ளை மோகத்தைப் பற்றி இவ்வளவு பேசுவது ஏன்? அது இன்று நம் கலாச்சாரத்தின் பகுதி ஆகிவிட்டதே என சிலர் கூறலாம். ஆனால் இந்த வெள்ளை மோகம் நமது குழந்தைகளின் மனதளவில் ஏற்படுத்தும் பெரிய பாதிப்புகளை நாம் மறந்துவிடக் கூடாது. Tripartite influence modelயின் படி ஒரு குழந்தைக்கு தன் உடல் சார்ந்த சுய மரியாதையை முக்கியமாக தீர்மானிப்பது மூன்று விஷயங்கள்- பெற்றோர், சுற்றமும் நட்பும், மற்றும் ஊடகம். தனது உடலையே அசிங்கமாக நினைத்து வெறுக்கும் குழந்தைகள், மனஅழுத்தம், தன்னமிபிக்கையின்மை போன்ற பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர். நாம் இன்று நம் குழந்தைகளுக்கு அத்தகைய சுற்றுசூழலையே உருவாக்கி உள்ளோம். காலனியத்துவதால்தான் நமது கலாச்சாரத்தில் இந்த வெள்ளை மோகம் பெரிதும் தலைதூக்கிவுள்ளது அதனால் அதை விட்டுவிட வேண்டும் என்பது இங்கு வாதம் இல்லை. மனித கலாச்சாரங்கள் ஒன்றோடு ஒன்று உரையாடி தினமும் எதோ ஒரு விதத்தில் மாறுபடுவதால் தான் காலங்கள் தாண்டியும் நாகரீங்கங்களும், கலாச்சாரங்களும் செழித்துக்கொண்டுள்ளன. அதே சமயத்தில் நமது எண்ணத்தில் எழும் பாரபட்சங்கள் எங்கிருந்து வருகிறது என்பதை அறிவது அவசியம். இனியாவது ஒவ்வொரு முறை நாம் கருப்பு சரும நிறத்தை இகழும் போதும், நாம் ஒருவிதத்தில் நம் குழந்தைகளின் சுயமரியாதையையும், தன்னம்பிக்கையையும் தாக்கிக்கொண்டிருக்கிறோம் என்பதை நினைவில் கொள்வோம்.

**தீபக்**
Coordinator

# நீட் கிராமப்புற மாணவர்களை எவ்வாறு பாதிக்கிறது?

நீட் தேர்வு 2013-ல் ஆரம்பிக்கப்பட்டது. நீட் தேர்வு (National Eligibility cum Entrance Test) என்பது பொது மருத்துவம், பல் மருத்துவம் துறையில் சேர்வதற்கு இந்திய அளவில் நடைபெறும் நுழைவுத் தேர்வு ஆகும்.

நடுவண் இடைநிலைக் கல்வி வாரியம் நடத்தும் இத்தேர்வு அகில இந்திய மருத்துவ நுழைவுத் தேர்விற்கு (All India pre Medical Test (AIPMT)) மாற்றாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நுழைவுத் தேர்வானது அனைத்து அரசுக் கல்லூரிகளுக்கும் தனியார் கல்லூரிகளுக்கும் பொருந்தும். தமிழ் உள்ளிட்ட 10 மொழிகளில் தேர்வு நடத்தப்படும் என்று அரசு தெரிவித்தது.

**அந்த 10 மொழிகள்:** தமிழ், ஆங்கிலம், குஜராத்தி, ஹிந்தி, வங்காளம், அஸ்ஸாமிஸ், கனடா, மராத்தி, ஒரியா, தெலுங்கு.

கிராமப்புற மாணவர்களை எவ்வாறு பாதிக்கிறது.

- கேள்விகள் CBSE முறையில் இருப்பதால் மாணவர்களால் கேள்விகள் புரிந்து கொள்ள முடியவில்லை.
- நமது மாநிலப் பாடத்திட்டத்துக்கும், CBSE பாடத்திட்டத்துக்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளதால் அவர்களால் கற்றுக் கொள்ளமுடியவில்லை.
- கிராமப்புற மாணவர்களுக்கு போதிய நிதி உதவி இல்லாததால் அவர்களால் NEET பயிற்சி வகுப்பிற்கு செல்ல முடியவில்லை.
- அரசுப் பள்ளிகளில் நீட் தேர்வுக்கான தனிப்பட்ட பயிற்சி வகுப்புகள் நடக்காததால் மாணவர்கள் தேர்வினை கண்டு அச்சப்படுகிறார்கள்.
- தேர்வுமையங்கள் வெகுதொலைவில் உள்ளதால் கிராமப்புற மாணவர்கள் தேர்வு எழுத மிகுந்த மன அழுத்தத்துடன் செல்கிறார்கள்.

**ANTONY JANCY**
English Teacher

# WHY IS HIGHER ORDER THINKING IMPORTANT?

As students grow older, they are asked by their teachers to do more and more with the information they have stored in their brains. These types of request require accessing higher order thinking (HOT).

Most of us don't think about thinking as much as we are required to do. But educators, and legislators have been thinking more about *thinking*.

As students move from elementary to middle school, and then to high school, they are asked by their teacher to do more and more with the information that they have stored in their brains. Students are asked to write review for the books that they are reading and are also asked to analyse why a character behaved in a certain way. In Science, if they are studying about sound, students might be asked to design and construct a new kind of musical instrument. In language and arts, they might be asked to compare and contrast Julius Caesar and Adolf Hitler, or to talk about the lessons of Nazism that holds for world events today. These types of requests require higher order thinking.

Higher order thinking may come easily for some students but difficult for others. But here's the good news, higher order thinking, like every other skills, can be learned and with practice a person's higher order thinking skill level can increase.

**MALAR SELVI**
English Teacher

In today's 21st century classrooms, students learn to evaluate information and be creative and innovative in their problem solving.

Learning the process of higher-order thinking is an important, yet attainable, goal in all classrooms, "critical thinking is self –directed ,self disciplined, self-monitored and self-corrected".

Bloom's taxonomy of thinking skills is important in helping teachers help student develop higher order thinking using bloom's taxonomy can help teacher's move students from lower-order thinking to higher order thinking.

- from remembering(gathering information)
- to understanding (confirming information)
- to applying (making use of knowledge)
- to analyzing (taking information part)
- to evaluating (judging the outcome)
- to creating in order to generate new ideas and solve problems

It is important because thinking is the first step of learning. As the students think at higher order they come across to various questions and it will give them an exposures to learn new things with interest.

**DHANALAKSHMI**
Science Teacher

# கை கழுவுதல் அவசியமானதா?

இன்றைய தலைமுறைகள் கை கழுவுதலை ஒரு மிகப்பெரிய வேலையாக கருதுகின்றனர். ஆனால், கை கழுவாமல் உண்ணப்படும் உணவுகளால் ஏற்படும் தீமைகளும் மற்றும் அவற்றால் முதலில் பாதிக்கப்படுவது முதலில் குழந்தைகள்தான் என்பதை முதலில் நாம் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

டெல்லி: சர்வதேச அளவில் உலக கை கழுவும் தினம் அக்டோபர் 15 அன்று கடைபிடிக்கப்படுகிறது. உலகின் பெரும்பான்மையான நோய்கள் சுகாதாரயின்மையால்தான் பரவுகின்றன என புள்ளிவிவரம் கூறுகின்றன.

பழங்காலத்தில் வீட்டின் முன்புறத்தில் ஒரு பெரிய பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி வைத்திருப்பார்கள். வெளி இடங்களுக்கு சென்று, வருபவர்கள் அந்த நீரில் கை, கால்களை சுத்தம் செய்த பிறகு தான் வீட்டிற்குள் நுழைவார்கள். ஆனால் இந்தப் பழக்கம் தற்போது மறைந்துவிட்டது.

இன்று உலகில் இறக்கும் குழந்தைகளில் மூன்றில் இருவர் வயிற்றுப் போக்கு மற்றும் சுவாச நோய் ஆகியவற்றால்தான் இறக்கிறார்கள். அதற்கு காரணம் பாக்டீரியா, வைரஸ்கள் மற்றும் ஒட்டுண்ணிகள் பெருமளவில் வாய் மூலமே உடலுக்குள் நுழைவதே, ஒரு கிராம் மனித மலத்தில் ஒரு கோடி வைரஸ்களும், பத்து இலட்சம் பாக்டீரியாக்களும் உள்ளன என மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பெரும்பாலான நோய்கள் பரவாமல் தடுக்க கைகளைக் கழுவுதல் மிகவும் முக்கியமானது. இன்று உலக அரங்கில் சுகாதாரத்தை முன்னிறுத்தி சொல்லப்படும் விஷயங்களில் கை கழுவும் முறைதான் முதன்கையாக உள்ளது. இதற்காக தான் உலக சுகாதார அமைப்பு ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 15-ம் நாளை உலக கை கழுவும் நாளாக அறிவித்துள்ளது. இந்நாளில் கை கழுவும் முறை பற்றியும், அதனால் உண்டாகும் நன்மை பற்றியும் உலகம் முழுவதும் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.



MITHRA J, VIII STD

**நாம் எப்போது எவ்வாறு கைகழுவ வேண்டும்:**

- காலையில் எழுந்த உடன் கைகளை நன்கு சுத்தமாக கழுவ வேண்டும். பிறகு தான் பல் துலக்க வேண்டும்.
- முக்கியமாக மலம் கழித்தபின் சோப்பு போட்டு கைகளைக் கழுவுவது நல்லது.
- எந்த வேலை செய்தாலும், உடனே கைகழுவதல் வேண்டும். சமைத்த பின்பு கூட பெண்கள் கைகளைக் கழுவுவது நல்லது.
- வாகனம் ஓட்டி வந்த பின்பும், உடனே கை கழுவுதல் நல்லது.
- அதிக ரசாயனம் கலந்த சோப்புகள் மற்றும் கிரீம்களைப் பயன்படுத்தக்கூடாது.
- குழந்தைகளுக்கு எந்த ஒரு உணவு கொடுப்பதற்கு முன்பும், அவர்களது கைகளை நன்கு சுத்தமாக கழுவிய பின்பே கொடுக்க வேண்டும். இந்த பழக்கத்தை அவர்கள் சீராக கடைப்பிடிக்கும்படி செய்ய வேண்டும்.
- கைகளை அவசர அவசரமாக கழுவக் கூடாது. குறைந்தது 30 வினாடியாவது கை கைழுவுவதற்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.
- கைகளை நன்கு தேய்த்துக் கழுவ வேண்டும். குறிப்பாக நக இடுக்குகளில் தண்ணீர் விட்டு கழுவ வேண்டும். இந்த முறைகளைக் கடைப்பிடித்து வந்தாலே, 60 விழுக்காடு நோய்களை தடுக்கலாம்!

**SHARMILA**
Computer Teacher

## ACTIVITIES



**Winners | Zonal Sports Meet**

It is delightful to share that 20 of our students won various medals and accolades in the Zonal Sports Meet organised by the Department of School Education Tamil Nadu. Students won in various events such as Relay, High Jump, Long Jump, Running, Hand Ball.




**Plastic Awareness Rally**

To create an awareness among the general public on the harmful effects of plastic, our students went on a rally. Students made placards on Plastic awareness and called out slogans to gather the public's attention. The rally received good response from the public.



**Field trip to Waste management facility**

Our school children from classes VI STD and X STD were taken to a field trip to Bio-Methane cum Waste Management Plant managed by an NGO called Hand-in-Hand. During the visit, students were briefed on different waste management techniques.



**Intra School Science Exhibition**

Our students from classes VI STD to XII STD participated enthusiastically in the science exhibition. Models on different topics such as Energy conservation, Waste Management, Resource Management, Transportation, etc. were made by the students.

## ACKNOWLEDGEMENTS

We as a school are grateful to those people who initiated this idea to inculcate and bring out the several hidden talents in our school. We would like to acknowledge the invaluable support provided by **our Principal Mrs. Jeya Dennison, our Correspondent Mr. V. P. Dennison** and our Teachers esp. **Mr. Vijayan, Mr. Rethna Kumar, Mrs. Puvaneswari, Ms. Sharmila.** Finally, we'd like to thank the readers and the future contributors whose role would be crucial in making this attempt a triumph.

**அன்பார்ந்த பெற்றோர்களுக்கு அறிவிப்பு, 2018-19 ஆண்டிற்கான**

**விஜயதசமி சிறப்பு மாணவர் சேர்க்கை ஆரம்பம்**

19-10-18 அன்று சேரும் PRE. KG, LKG மற்றும் UKG சேரும் மாணவர்களுக்கு

**பல சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்**

அழியாத செல்வமாம் கல்வி செல்வத்தை உங்கள் குழந்தைகளுக்கு பரிசாக அளியுங்கள்

**KIDZEE யில் சிறப்பு மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது.**

**ரூ.12,000 மதிப்புள்ள LEARNING TABLET இலவசமாக வழங்கப்படும்.**

**தொடர்புக்கு: 97900 51200 | web: www.ijmhss.org/www.kidzee.com**